**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No.58 of 2020 |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 4 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : Sivakumar |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2022.**

முதல் விசாரணை:

நான் ஊத்தங்கரையில் குடிஇருந்து வருகிறேன். நான் ஊத்தங்கரையிலுள்ள கடை எண்.2985 ல் மேற்பார்வையாளராகவும் காட்டேரியிலுள்ள கடை எண்.2936 ல் கூடுதல் பொறுப்பாக மற்றும் டாஸ்மாக்கில் மேற்பார்வையாளராக 2018 ம் ஆண்டு பணி செய்து வந்தேன். நான் சம்பவ தினமான 15.12.2018 ம்தேதி இரவு சுமார் 10.1 மணியளவில் ஆனந்தனின் அலைப்பேசியிலிருந்து வித்தியா மந்தில் கல்வியியல் கல்லூரி காவலர் என்னிடம் ஆனந்தன் மற்றும் முருகளனை சுட்டுவிட்டதாக தகவல் தெரிவித்தார். நான் எங்கு நடந்தது என்று கேட்ட போது கல்லூரி அருகே நடந்ததாக கூறினார். நான் அவரிடம் ஆம்புலன்ஏற்பாடு செய்யுமாறு கூறியபோது அவர் தகவல் தெரிவித்துவிட்டதாக கூறினார். அவரிடம் நான் ஊத்ததங்கரை அரசு மருத்துவமணைக்கு வந்துவிடுவதாக சொல்லிவிட்டு நான் ஊததங்கரை அரசு மருத்துவமணைக்கு சென்றபோது அவர்களும் அஆம்புலன்ஸில் அரசு மருத்துவமணைக்கு வந்துவிட்டனர். மருத்துவர் ஆனந்தனை பரிசோதித்தபோது அவருக்கு வலது கையிலும் வலது அல்லையிலுகூம் காயங்கள் இருந்தது. ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில் உரிய மருத்துவ வசதிகள் குறைவாக இருப்பதால் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு செல்வதாக கூறினோம். நான் ஆம்புலன்ஸ் தயார் செய்துக்கொண்டு உடனடியாக அ.சா.1, 2, நான், இளையராஜா, மாரியப்பன் ஆகியோர் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்றோம். காட்டேரிக்கடையின் மேற்பார்வையாளர் சுபாஷ் என்பவருக்கு தகவல் தெரிவித்தேன். வேர் ஊத்தங்கரை அரசு மருத்துவமணைக்கு வருவதாக சொன்ன போது அவரை தருமபுரி அரசு மருத்துவமணைக்கு வருமாறு தெரிவித்தேன். தருமபுரி அரசு மருத்துவமணையில் முருகன் மற்றும் ஆனந்தனை மருத்துவர்கள் தனிதனியாக பரிசோதனை செய்தனர். ஆனந்தனுக்கு அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை அளிக்கப்பட்டது முருகனுக்கு வலது காதில் காயம் ஏற்பட்டிருந்தது. ஆனந்தனுக்கு ஸ்கேன் மருத்துவ பரிசோதணை செய்தபோது அவரது உடம்பில் 2 குண்டுகள் இருப்பதாக தெரிவித்து மேல் சிகிச்சைக்காக சேலம் அழைத்து செல்லுமாறு மருத்துவர்கள் தெரிவித்தனர். பின்பு அங்கு ஆம்புலன்ஸ் தயார் செய்து கொண்டு ஆனந்தனுடன் நானும், சுபாஷூம் சேலம் அரசு மருத்துவமணைக்கு தருமபுரி அரசு மருத்துவமணையிலிருந்து சுமார் 1.30 மணிக்கு கிளம்பிச்சென்றோம். ஆனந்தனை சேலம் அரசு மருத்துவமணையில் அனுமதித்து சிகிச்சை தொடங்கிய பிறகு காலையில் நானும், சுபாஷூம் அங்கிருந்து கிளம்பிவிட்டோம். போலீசார் என்னை மறுநாள் நிலையத்திற்கு வரவழைத்து விசாரணை செய்தனர்.

குறுக்கு விசாரணை 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில்:

ஆனந்தனுக்கு வலது மேல் கையில் தீக்காயமும், வலது அல்லையில் காயமும் இருந்தது. ஆனந்தனுக்கு வலது கையில் ரத்தமிருந்தது. அந்த காயங்களுடன் தான் அவர் வந்தார். வலது அல்லையில் ரத்த காயங்களும் இருந்தது. ஆனந்தனுக்கு தீக்காயம் கையில் வட்ட வடிவில் இருந்தது. ஆனந்தன் உறவினர்கள்ள சேலம் அரசு மருத்துவமணைக்கு வந்துவிட்டதால் நாங்கள் இருவரும் அதிகாலை கிளம்வி வந்துவிட்டோம். சேலம் அரசு மருத்துவமணை ஐசியு வில் ஆனந்தன் எத்தனை நாட்கள் இருந்தார் என்று தெரியாது. ஆனால் மருத்துவமணையில் 10 நாட்கள் சிகிச்சை எடுத்துக்கொண்டார். சேலம் அரசு மருத்துவமணையில் நாங்கள் கிளம்பும் முன்பு வரை ஆனந்தன் மயக்கத்தில் இருந்தாரா என்றால் ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில் பேசும் நிலையில் இருந்தார் ஆனால் மருத்துவர்கள் எங்களை அனுமதிக்கவில்லை. நாங்கள் இருந்த வரை சேலம் அரசு மருத்துவமணையில் ஆனந்தன் பேசும் நிலையில் இல்லை. அவர் சிகிச்சையிலிருந்தார். ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில் காவல் ஆய்வாளர் இருந்தாரா என்று எனக்கு தெரியாது 4, 5 காவலர்கள் இருந்தனர். காட்டேரி மதுக்கடையில் எப்போதும் எப்போதும் 2 அல்லது 3 நபர்கள்

இருப்பார்கள் வியாபாரம் அதிகமாக இருக்கும்போது கண்காணிப்பாளர் உட்பட 3 நபர்களுக்கு அதிகமாக இருப்போம். தருமபுரி அரசு மருத்துவமணையில் போலீசார் முருகனை விசாரித்தனர். நாங்கள் சேலம் அரசு மருத்துவமணைக்கு செல்ல இருந்ததால் எங்களை விசாரிக்கவில்லை. முருகனை சுமார் 1.30 மணிக்கு போலீசார் விசாரித்தனர். போலீசார் ஆன்புலன்ஸ் வாகனத்தை பின் தொடர்ந்து தருமபுரி அரசு மருத்துவமணைக்கு வந்தனர். இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட பணம் ரூ.25,000/-த்தை நீதிமன்றத்திலிருந்து நாங்கள் பெற்றோம் மற்ற கடை சம்மந்தமான பொருட்கள் எதுவும் போலீசார் கைப்பற்றினார்களா என்று எனக்கு தெரியாது. போலீசார் கடை ஊழியர்கள் அனைவரையும் விசாரித்தனர். போலீசார் என்னை விசாரித்த போது சுபாஷ் மற்றும் இளையராஜாவும் நிலையத்திற்கு வந்திருந்தனர். முருகன் 4, 5 நாட்கள் தருமபுரி அரசு மருத்துவமணையில் இருந்ததாக சொன்னார் நான் கோவிலுக்கு சென்றுவிட்டதால் அவர் எத்தனை நாட்கள் மருத்துவமணையில் இருந்தார் என்று எனக்கு தெரியாது.

குறுக்கு விசாரணை 3 எதிரி தரப்பில்:

மேற்படி 1, 2 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறுவிசாரணை:</u> இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**